<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

<u>O.S. No.249/2024</u>

2026–ம் ஆண்டு ஜூன் மாதம் 10–ஆம் நாள் வா.சா.1 சாட்சி திரு.சதீஸ்குமார் என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி உயர்திரு.கே.எஸ்.ஷபீனா, எம்.எல்., சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு.சதீஸ்குமார் | தொழில் : |
| த/பெ : ராஜகோபால் | கிராமம் : செண்பகப்புதூர் |
| வயது : | தாலுக்கா : சத்தியமங்கலம் |

<u>வா.சா.1 : முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

<u>ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.</u>

22.10.2022ம் தேதியிட்ட வாதிக்கு, பிரதிவாதி எழுதிக்கொடுத்த ரூ.7,00,000/–க்கு உண்டான தாவா கடனுறுதி சீட்டு அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 18.11.2023ம் தேதியிட்ட வாதி வழக்குரைஞர் மூலம் அனுப்பிய பதிவு அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.2 ஆகவும், 21.11.2023ம் தேதியிட்ட வாதி அனுப்பிய பதிவு அறிவிப்பை

பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ.3 ஆகவும், வாதியின் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது வா.சா.ஆ.4 ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களின் பரிசீலனையில் தாவாப்படி பரிகாரம் வழங்க கோருகிறேன்.

பிரதிவாதி வருகையில்லாத் தரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ளதால் குறுக்கு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.